பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 07 2024 **FRIDAY** 6 30 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கு தொடர்ந்து ஊக்கமளிக்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாட்டின் வளர்ச்சியை மட்டுமே இலக்காக கொண்டு பிரதமர் செயல்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. கள்ளச்சாராய உயிரிழப்புகள் தொடர்பாக தவறான தகவல்களை தெரிவிப்பதை அஇஅதிமுக நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு. எஸ். ரகுபதி கூறியுள்ளார்.

4. கர்நாடக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக, ஒகேனக்கல் ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

5. ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Abhay Singh – Velavan Senthilkumar** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கு தொடர்ந்து ஊக்கமளிக்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்தி, கடந்த நிதியாண்டில் 1 லட்சத்து 26 ஆயிரத்து 887 கோடி ரூபாயை எட்டியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்காக, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்திக்கான முனையமாக இந்தியாவை உருவாக்குவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>><<<<

நாட்டின் வளர்ச்சியை மட்டுமே இலக்காக கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இன்று கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களை காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல்காந்தி ஏன் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவிக்கவில்லை என்றும் திரு. எல். முருகன் வினவினார்.

>>>><<<<

கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில சட்ட அமைச்சர் திரு. எஸ். ரகுபதி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநில எல்லைப்பகுதிகளில் வாகன சோதனை கடுமையாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் கள்ளச்சாராய பாதிப்பால் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இருப்பினும், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, இதுதொடர்பாக தவறான தகவல்களை சமூகவலைதளத்தில் பதிவு செய்துள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற தவறான தகவல்களையும் தேவையற்ற கண்டனங்களையும் தெரிவிப்பதை திரு. எடப்பாடி பழனிசாமி நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு. ரகுபதி அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கள்ளச்சாராய விவகாரத்தை திமுக அரசு திட்டமிட்டு மறைப்பதாக குறை கூறினார்.

அனைத்து துறைகளிலும் ஊழல் அதிகரித்துள்ளதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பை மாநில அரசே நடத்தாதது ஏன் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை வினவியுள்ளார்.

விழுப்புரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பீகார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

இதற்கு உச்சநீதிமன்றம் அனுமதி அளித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இருப்பினும் தமிழக அரசு இந்த பிரச்சினையில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏற்புடையதல்ல என்றும் திரு. அண்ணாமலை தெரிவித்தார்.

>>>><<<<

காவிரி விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக கர்நாடக அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு, மத்திய அரசு மற்றும் காவிரி மேலாண்மை ஆணையத்தை அணுகி, உடனடியாக தண்ணீரை திறந்துவிடும்படி கர்நாடக அரசுக்கு அறிவுறுத்த, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. ராமதாசு அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>><<<<

முதுநிலை படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வு அடுத்த மாதம் 11ஆம் தேதி நடைபெறும் என்று தேசிய தேர்வு வாரியம் அறிவித்துள்ளது.

இந்த தேர்வுகள் அன்றைய தினம், காலை – மாலை என இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும் என்று அந்த வாரியத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுதொடர்பாக கூடுதல் விவரங்களை தேசிய தேர்வு வாரியத்தின் இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு. பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இதற்கிடையே, காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக, ஒகேனக்கல் ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

விருதுநகர் மாவட்டத்தில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவது குறித்த ஒருநாள் பயிற்சி முகாமை ஆட்சியர் திரு. ஜெயசிலன் இன்று தொடங்கி வைத்தார்.

**>>>><<<<**

மதுரை மாவட்டம், காளப்பன்பட்டி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளை ஆட்சியர் திருமதி. சங்கீதா ஆய்வு செய்தார்.

**>>>><<<<**

ராணிப்பேட்டை நகராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் ஆட்சியர் திருமதி. வளர்மதி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

**>>>><<<<**

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஊராட்சித்துறை சார்பில் ஓய்வூதியதாரர்களின் குறைதீர்க் கூட்டம் ஆட்சியர் திரு. தர்பகராஜ் தலைமையில் நடைபெற்றது.

**>>>><<<<**

திருப்பூரில் கட்டிட கட்டுமானப் பொருட்களின் மூன்று நாள் கண்காட்சி இன்று தொடங்கியது.

**>>>><<<<**

தென்காசி மாவட்டம், கடனா அணையிலிருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

**>>>><<<<**

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Abhay Singh – Velavan Senthilkumar** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மலேசியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு கடைசி லீக் ஆட்டத்தில் இந்த இணை, பிலிப்பைன்ஸ் இணையை வென்றது.

இப்பிரிவில் முதல் இடத்தைப் பிடித்ததன் மூலம் இந்த இணை அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Joshna Chinappa - Abhay Singh** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>><<<<**

**Saint Denis Reunion** ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Meiraba Luwang Maisnam** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Flora Engineer**-ரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>><<<<**

இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான முதலாவது மகளிர் டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

சென்னையில் நடைபெறவுள்ள இப்போட்டியில், டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

**>>>>END<<<<**